பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆடி 1 றஜப் 28 இதழ்: 155
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-7-77

## 'கொடுமைகள்' குறித்து நீதி விசாரணை நடக்கும்!

### கலைஞரின் கேள்விக்கு முதல்வர் பதில்

சென்னை, ஜுலை. 15

தமிழ்நாடு சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில், அ. இ. அ. தி. மு. கழகம் பெருவெற்றியீட்டி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர், இம்மாதம் 4-ம் திகதி ஆரம்பமான சட்டப் பேரவையின் முதலாவது கூட்டத்தொடர்; சூடானவாதங்கள், சுவையான சம்பவங்கள், சலசலப்புகள், எதிரடிகள், கரகோஷங்களின் மத்தியில் பத்து நாட்கள் வரை நீடித்து, எதிர்க்கட்சியினரின் அத்தனை ஒத்திவைப்பு பிரேரணைகளையும் நிராகரித்து ஒரு சாதனை புரிந்து, இன்று எதிர்பாராத 'கேள்வி-நேரம்' பகுதியுடன் முடிவுக்கு வந்தது!

#### கேள்வி-நேரம்

ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் இன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதற்கு முன்னர், சட்டப் பேரவையின் இன்றையவிசேஷ அம்சமாக கேள்வி- நேரம்பகுதி இடம்பெற்றிருந்தது. இது மட்டுமன்றி அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்பட்ட ஐந்து கவன ஈர்ப்புத்தீர்மானங்களும் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் சூடான பதிலுக்கு இலக்காகி, தீர்மானங்களைக் கொண்டுவந்த அந்தத் தலைவர்களே தங்களின் தீர்மானங்களை விலக்கிக்கொள்ள வேண்டிய ஒரு இக்கட்டான நிலை உருவாயிற்று!.

இன்றையக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எழுவதுநிமிடங்கள்வரை உரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பதிலளித்த முதல்வர் எம்.ஜி.ஆரும் விட்டுக் கொடுக்காமல், எழுபது நிமிடங்கள்வரை உரை நிகழ்த்தினார்.

#### பாட்டுப் பாடலாமா?

அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர் திரு. முசிறிப்பித்தன் தனது உரையை, ''நீராடும் கடலுடுத்த...'' என்ற வணக்கப்பாடலுடன் ஆரம்பித்த போது சிறு சலசலப்பு ஏற்பட்டது. தி.மு.கழக உறுப்பினர் திரு சுப்பு உடனே எழுந்து, ''இச் சபையில் பேசத்தான் உரிமை இருக்கிறது, பாடுவதற்கு அல்ல. உறுப்பினர் இங்கு பாடலாமா?'' என்று சபாநாயகரைக் கேட்டார். இதற்குச் சபாநாயகர் திரு முனு ஆதி; ''இப் பேரவையில் முன்னர் பலர் பாடியிருக்கின்றனர். பாடலாம்'' என்று பதிலளித்ததும் திரு சுப்பு 'சும்மா' இருக்கவில்லை. மீண்டும் எழுந்து ''அப்படியானால் நடிக்க முடியுமா?'' என்று கேட்டதும் சபையின் ஒரு பக்கத்திலிருந்து 'கலீ' ரெனச் சிரிப்பொலி எழுந்தது. சபாநாயகரும் மிகவும் பொறுமையுடன் ''இப் பேரவையின் கௌரவத்துக்கு இழுக்கு வராதபடி நடக்கலாம்'' என்றதும் இவ் விஷயம் அத்துடன் முடிவு பெற்றது.

#### கலைஞர் கேள்வி; எம்.ஜி.ஆர். பதில்

''தமிழ் நாட்டில் இரு மொழிக்கொள்கையை புதிய அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கப்போவதை நாம் வெகுவாகப் பாராட்டுகின்றோம்''

[8-ம் பக்கம் பார்க்க]

# யாழ். மருத்துவமாதர்கள் வேலைக்குத் திரும்பினர்!

## கோரிக்கைக்கு மேலிடம் சம்மதம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி மருத்துவ மாதர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்துநேற்று அவர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வார்ட்டில் ஒரு குழந்தை காணமற்போனதையிட்டு நடந்த விசாரணையைத் தொடர்ந்து ஒரு மருத்துவ மாதுக்குத் தற்காலிக வேலைநீக்க உத்தரவு வழங்கப்பட்டது.

இதனை ஆட்சேபித்து மருத்துவ மாதர் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

யாழ். பெரியாஸ்பத்திரி நிர்வாகச் சீர்கேட்டினால் ஏற்பட்ட தவறை மூடிமறைப்பதற்கு அப்பாவியான மருத்துவமாதை நன்கு திட்டமிட்டு அநீதியான முறையில் தண்டித்ததையிட்டு வேலைநிறுத்தம் செய்வதாக மருத்துவ மாதர் சங்கம் அறிவித்திருந்தது. மீண்டும் பாரபட்சமற்ற விசாரணை நடத்திக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் கோரினர்கள்.

மருத்துவ மாதான திருமதி சிவபாக்கியத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக வேலைநீக்கக் கடிதம் வாபஸ் பெறப்பட்டு, மீண்டும் இவ்விடயம் தொடர்பாக பகிரங்க விசாரணைக்கு மேலிடம் உத்தரவிட்டிருப்பதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

நேற்றுக் காலை மருத்துவ மாதர்கள் வேலைக்குத் திரும்பினர்கள். தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் மருத்துவ மாதர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. (கி-க)

## 'லேக்ஹவுஸ்' மூடப்பட்டது!

கொழும்பு, சனி

'லேக்ஹவுஸ்' பத்திரிகை ஸ்தாபனம்நேற்று திடீரென மூடப்பட்டு, பலத்த பொலிஸ்காவல் போடப்பட்டது!

இத் திடீர் நடவடிக்கைக்கு அரசியல் பேச்சுக்கள், வேலைநிறுத் தங்கள் எதிரொலிதான் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன்னரும் வேலைநிறுத்தம் காரணமாக இந்த ஸ்தாபனம் மூடப்பட்டிருந்ததுகுறிப்பிடத் தக்கது.

## சஞ்சய், சுக்ளா மீது வழக்கு

### திரைப்படச்சுருளை எரித்தனராம்

புதுடில்லி, ஜுலை 15

திரைப்படம் ஒன்றின் சுருள்களை அழித்ததான குற்றச்சாட்டின் பேரில் திரு. சஞ்சய் காந்தி, முன்னாள் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு சுக்ளா ஆகியோர் மீது புதுடில்லி நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத்துறையினர் வழக்கொன்றினைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கில் திரு. சுக்ளா முதலாம் எதிரியாகவும் திரு. சஞ்சய் இரண்டாம் எதிரியாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

திருமதி இந்திரா காந்தியின் இல்லத்திற்கு திரு. சுக்ளா படச்சுருள்களை 1975 நவம்பரில் எடுத்துச் சென்றாரென்றும் பின்னர் அவை சஞ்சையின் மாருதி கம்பெனிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஊழியர்களால் எரிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

திரைப்படச் சுருள்காணமல் போய்விட்டதென சுக்ளாவின் உத்தரவின் பேரில் அதிகாரிகள் சுப்ரீம் கோர்ட்டில் பொய்யான தகவல் கொடுத்தனராம்.

படச்சுருள் இருந்த டப்பாக்களை மாருதிக் கம்பனியில் வைத்து ஊழியர்கள் அழித்துவிட்டதாகவும் குற்றச் சாட்டில் கூறப்பட்டிருக்கிறது. (உ)

## ரயில் பலியெடுத்தது

கொழும்பு, வெள்ளி

ரயில் மோதி 50வயது பெண் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் கொம்பனித் தெருவில் நடைபெற்றது.

மஞ்சள்ஜாக்கெட்டும் பச்சை வர்ணச் சேலையும் இனந் தெரியாத இவர் அணிந்திருந்தார்.

## லொறியுடன் அரிசி மூடைகள் கொள்ளை

### புத்தளத்தில் ஆயுதக்கோஷ்டி கைவரிசை

புத்தளம், வெள்ளி

அதிகாலைவேளை லொறி ஒன்றை வழிமறித்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று சாரதியின் 800 ரூபா ரொக்கத்தையும் ஒரு லட்சத்து 25,000 ரூபா பெறுமதிமிக்க லொறியையும் லொறியில் இருந்த 42,000 ரூபா பெறுமதிமிக்க 140 அரிசி மூடைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

'செவர்லட்' காரில் வந்த இக்கோஷ்டி பயன்படுத்திய காரை பொலிசார் கைப்பற்றியதுடன் கொள்ளைக்கோஷ்டியில் வந்த பெரேரா, விதானகே என்ற இரு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

பணம், அரிசி மூடைகள் லொறி என்பன கைப்பற்றப் படவில்லை. துப்பாக்கி முனையில் இக்கொள்ளை நடந்ததாம். (உ)

## "ஈழநாடு" தேர்தல் போட்டி-77

பொதுத்தேர்தலுக்கு இன்னும் 5 நாட்களே உண்டு.

'ஈழநாடு' நடாத்தும் தேர்தல் போட்டியில் நீங்கள் கலந்துகொள்ளவில்லையா?

போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித்தினம் இம்மாதம் 19-ந் திகதி ஆகும்.

இன்றே உங்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பி யாழ். நகரில் நிறுவப்படவுள்ள புற்றுநோய் சிகிச்சை நிலைய கட்டிட நிதிக்கு உதவுங்கள்.

போட்டி விதிகளும் விண்ணப்பப்படிவமும் உள்பக்கத்தில்.

பருத்தித்துறை பஸ் ஊழியர்

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

ஊழியர் பிரதிநிதிகளுக்கும், மேலிடத்திற்கும், வேலை நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது.

பழுதடைந்துள்ள சகல பஸ்களையும், உடனடியாக மாற்றிக்கொடுப்பது தற்போதைய நிலையில் சாத்தியமாகாதென்று டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சுவார்த்தை இன்று அல்லது நாளை முடிவடையும் எனக் கூறப்படுகிறது. [க]

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

# ஈழநாடு

## தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

## போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79 | ஊர்காவற்றுறை | ............ |
| 80. | வட்டுக்கோட்டை | ............ |
| 81. | காங்கேசன்துறை | ............ |
| 82. | மானிப்பாய் | ............ |
| 83. | கோப்பாய் | ............ |
| 84. | உடுப்பிட்டி | ............ |
| 85. | பருத்தித்துறை | ............ |
| 86. | சாவகச்சேரி | ............ |
| 87. | நல்லூர் | ............ |
| 88 | யாழ்ப்பாணம் | ............ |
| 89. | கிளிநொச்சி | ............ |
| 90. | மன்னார் | ............ |
| 91. | முல்லைத்தீவு | ............ |
| 92. | வவுனியா | ............ |
| 94. | திருகோணமலை | ............ |
| 95 | மூதூர் | ............ |
| 96. | கல்குடா | ............ |
| 97. | மட்டக்களப்பு (1) | ............ |
| | (2) | ............ |
| 98. | பட்டிருப்பு | ............ |
| 100. | சம்மாந்துறை | ............ |
| 101. | கல்முனை | ............ |
| 102. | பொத்துவில் (1) | ............ |
| | (2) | ............ |
| 103. | புத்தளம் | ............ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இ | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 85. | பருத்தித்துறை | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ............ |
| | | 2. | ............ |
| | | 3. | ............ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைகளுக்கும் அதன்நடுவர் குழு"வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையே இப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றுவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977

---

### வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

## வெற்றுச் சாக்கு விற்பனை

மேற்படி ப. நோ. கூ. சங்கத்தில்6000-க்கும் மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குள்ளன. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப் பத்திரப்பணமாகவும், ரூபா 250/- கேள்விப்பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரங்களை அறிய விரும்பின் சங்க அலுவலக நேரத்தில் சங்க அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் ரூபா 500/- பிணைப்பணமாகக் கட்டுவதுடன் 3-8-77-க்கு முன் முழு வெற்றுச் சாக்குகட்குமுரிய பணத்தைச் செலுத்தி சாக்குகளைப்பெற்றுக் கொள்ள வேண்டும்.

முடிவு திகதி: 30-7-77 காலை 10-00 மணி.

2. சுவீப்பிங் மாவு
   பழுதடைந்த வெற்றுறமகள்.
   லொறி ரயர்கள் (பாவித்தது)
   லொறி றிம்கள் (பாவித்தது.)

மேற்படி பொருட்களும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.

வேலணை,
13-7-77. 6659

---

### சுன்னுகம் பல.நோ.கூ. சங்கம் (வரையுள்ளது) சுன்னுகம்

## கேள்வி விளம்பரம்

சுன்னுகம் பல. நோ. கூ.சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

(1) 3000-க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள்.
(2) கழிவுப்பொருட்கள்.
(3) கழிவு வெற்றுப் பரல்கள்.

கேள்விப்பத்திரங்கள் 26-7-1977 செவ்வாய்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். 21-ம், 22-ம் திகதிகள் எமது சங்க விடுமுறை நாட்களான படியால், ஏனைய வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் வைக்கப்படும் மேலுறைகள் அரக்கு முத்திரையிடப்பட்டே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

14-7-1977. 6661

---

### யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கேள்வி விண்ணப்பம்

எமது மின்தறி ஆலையில் உற்பத்திப் பொருளாகிய, கிறே பப்ளின் (Grey Poplin) கேள்விப் பத்திரத்தின் மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. கொள்வனவுசெய்ய விரும்புவோர் விலை விபரங்களைக் குறித்து 18-7-'77 2 மணிக்குப் பிந்தாமல் சங்கக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொது முகாமையாளர்

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம். 6666

---

# வரி விளம்பரம்

### தேவை

சிறுவர்கள் ஓடக்கூடிய நல்ல நிலையிலிருக்கும் சைக்கிள் உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும் 274, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 6665

---

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் பாடசாலைக்கு ஆர்வமுடன் ஜி. சி. ஈ. உயர்தரம் ஏச். என். சி. ஈ. வகுப்புகளுக்கு போதிக்கக் கூடிய கலை, விஞ்ஞான, வர்த்தக ஆசிரியர்கள் தேவை. விளம்பர இல: 6660 மே/பா. 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 6660

---

### புத்தூர் கிராமாட்சிமன்றம்

## கேள்விவிளம்பரம்

புத்தூர் கிராமாட்சிமன்றத் தலைவரால் இதன்கீழ் குறிப்பிடப்பட்ட ரேட்டு வேலைக்கு கேள்விகள் 4-8-77 ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப் பணம் ரூபா 100/-ம், பத்திரப் பணம் ரூபா 15/-ம் கட்டியதின் பேரில் 2-8-77 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும். மேலதிக விபரங்கள் புத்தூர் கிராமாட்சிமன்ற அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**வேலையின் விபரம்.**

புத்தூர் சரஸ்வதி (சொக்கத்திடல்) வீதி வேலை (அரசாங்க நன்கொடை-1977)

மூ. திருநாவுக்கரசு,
ஜே. பி.
தலைவர்
புத்தூர்
கிராமாட்சிமன்றம்,

கிராமாட்சிமன்றப் பணிமனை,
புத்தூர்,
14-7-1977. 6663

---

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-1977 ல் ஆரம்பமாகவுள்ளது. நிச்சயமான வேலை வாய்ப்பைத் தரக்கூடிய விதத்தில் பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பல வழிகளில் பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். அதிபர், இன்ஸ்டிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 6635

---

### விற்பனைக்கு

ஈழத்தமிழர்இறைமைட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் தமிழ்த் தலைவர்கட்கெதிரான தேசத்துரோகக் குற்றச்சாட்டு வழக்கில் அமரர் மு. திருச்செல்வம் கியூ சி ஆற்றிய வழக்குரை வாதக்கருத்துக்களின் தொகுப்பு: விலை 4-25. தொகையாக வாங்குவோர்க்குத் தகுந்த கழிவு உண்டு. ஸ்ரீ காந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6649

---

பருத்தித்துறை "மூர்க்கத்தடி" எனக்கூறப்படும் கடற்கரை பிரதான வீதியில் மின்சாரம், குழாய்நீர் வசதிகளுடன் காணிப்பரப்பு 32 லாச்சம் கொண்ட பல அறைகள் அடங்கிய பெரியவீடும், தென்னந்தோட்டமும் உள்ளவளவு பற்றிய விபரம் வேண்டியோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். மாகாணத் தலைவி, மாகாண இல்லம், தபாற்பெட்டி இல 65, தி. கு. கன்னியர் மடம், யாழ்ப்பாணம். 6654

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

(இறந்தவர்) கொக்குவில் மேற்கு சண்முகம் வேலுப்பிள்ளை சண்முகம்பிள்ளை. —வாதி

காலஞ்சென்ற கொக்குவில் மேற்கு சண்முகம் வேலுப்பிள்ளை சண்முகம்பிள்ளையின் மரணசாதன தத்துவகாரனாக யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு தத்துவ வழக்கு இல: 2749 ல் நியமிக்கப்பட்ட டாக்டர் இராசரத்தினம் அருள் பிரகாசம் — பதில்வாதி

எதிராக

இல: ஈடு/10959

யாழ்ப்பாணம், பெரியகடை, மலேயன்கபே முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலு —பிரதிவாதி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/ 10959 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977ம் ஆண்டு ஜுலை மாதம் 27ம் திகதி (27-07-1977)

முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 29,780/-ம் 16-7-1969 தொடக்கம் 8-6-1970 வரைக்கும் ரூபா 20,000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 841/65 இதில் ரூபா 5158/35 தீர்வையாலும் ரூபா 841/65 செலவாலும் கொடுபட்டுள்ளது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்குஇறை:- "அணிஞ்சிலடியும் பாதிரித்திடலும்" நில; பர. 1 குளி 4 27/32 வீடும் கிணறும் "Y" என்று அடையாளமிட்டு கிழக்கேயிருக்கும் கையொழுங்கைக்குப் போவதற்காகப் பொதுவாக விடப்பட்ட V. C யில் உரிமையும், எல்லை கிழக்கு குருசாமிச் செட்டியார் நாகலிங்கம் செட்டி பெண் ஆச்சிக் கண்ணம்மாவினுதனம், வடக்கு பொதுவாக விடப்பட்ட "Y" என்னும் பாதையும் காதர் மொகிதீன் பெண்கதியும்மாவினுதனமும், மேற்கு சொல்லப்பட்ட கதியும்மாவுக்கும் சுல்தான் சிக்கந்தருச்குமுரிய ஆதனங்கள், தெற்கு சுல்தான் சிக்கந்தருக்குமுரிய ஆதனமும் ரேட்டும் இதடங்கலும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்,

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
06-22-1977 6657

# எம். ஜி. ஆர். தலைமையில் திராவிட இயக்க ஆட்சி

## நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, ஜூலை 15

'சிலர் கழுகுப்பார்வைபார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நாம் கவனமாக இருக்கவேண்டும்' என்று நாவலர் நெடுஞ்செழியன் கூறினார்.

சென்னையில் நடந்த அ. இ. அ. தி மு க. கூட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன் பேசினார்.

அவர்மேலும் கூறியதாவது:

எந்த நிலை உருவாகவேண்டும் என்று தமிழக மக்கள் விரும்பினார்களோ அந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அ. இ. அ தி. மு க மகத்தான வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது.

தமிழக மக்கள் அண்ணாவின் பக்கம்தான் இருக்கிறார்கள் என்டதை இந்தவெற்றி காட்டுகிறது.

அறிஞர் அண்ணாவின் பெருமுயற்சி காரணமாக 31 ஆண்டுகளுக்கு பிறகு 1967-ல் தி. மு. க. ஆட்சி ஏற்பட்டது. அதன்பிறகு திராவிட இயக்கம் வளர்வதற்கு யார் காரணம்? வீழ்ந்ததற்கு யார் காரணம்? என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

மீண்டும் திராவிட இயக்கத்தின் ஆட்சிவருமா என்று அனைவரும் ஏங்கிக்கிடந்தனர். திராவிட இயக்கத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்தியவர் எம். ஜி. ஆர்

அந்தப் பெருமை எம். ஜி. ஆரைத்தான் சாரும். இந்த வெற்றிக்காக பாடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறேன்.

### யார் அண்ணாவின் தம்பிகள்

இந்த மேடையில் அறிஞர் அண்ணாவின் தம்பிகளை நான் பார்க்கிறேன். ஆனால் சிலர் தங்களோடு இருப்பவர்கள் மட்டும் தான் அண்ணாவின் தம்பிகள் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு சிலர் இவர் ஆளுவதா? இவர்களால் ஆளமுடியுமா? 3 மாதம் தங்குமா 6 மாதம் தாங்குமா? என்று கேள்விக்கணைகளை தொடுக்கிறார்கள்.

அண்ணாவையும் பார்த்து அப்படித்தான் கேட்டார்கள்

அதற்கு அண்ணா சட்டசபையில் அழகாக விளக்கம்கொடுத்தார்.

இன்று எங்களைப் பார்த்து சிலர் வியப்படைகிறார்கள். அந்த வியப்புதான் எங்களுக்கு வலிவு என்றார் அண்ணா.

அந்த வியப்புதான் எம். ஜி. ஆரின் வலிவு என்பதை தெரிவித்துக்கொள்றேன்.

### கழுகுப்பார்வை

தமிழகம் ஏராளமாக எதிர்பார்க்கிறது. இந்த ஆட்சி குறைபாடுகளை நீக்கும்; ஏழ்மையை அகற்றும் என்று எதிர்பார்க்கிறது. தொல்லை கொடுக்கசிலர் கழுகுப்பார்வை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே நீங்கள் அனைவரும் தொடர்ந்து இந்த ஆட்சிக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும்.

இந்த 14 அமைச்சர்களும், அதிகாரிகளும் மட்டும் பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது. அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்தால்தான் பிரச்னைகளை தீர்க்கமுடியும். (உ)

# ஆயுதக் குவிப்பு?

## அமெரிக்கா மறுப்பு

வாஷிங்டன், ஜூலை 15

தென்னாபிரிக்காவில் அமெரிக்க ஆயுதங்களைக் குவித்து வருவதாக வெளியான செய்திகள் தவறானவை என்று அமெரிக்க அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

300 கோடி ரூபா பெறுமதி மிக்க ஆயுதங்களை தென்னாபிரிக்காவில் இத்தாலி, பிரிட்டன், அமெரிக்க ஆகியநாடுகள் குவித்திருப்பதாக இதற்கு முன்னர் செய்திகள் வெளியாகின.

இவ்விதமான நடவடிக்கைகளை தமது நிர்வாகம் அங்கீகரிக்காதுஎன அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்தார். (உ)

## எச்சரிக்கை

லண்டன், ஜூலை 15

சிலி மனித உரிமைகள் மீறல் நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொண்டால் ஐரோப்பிய சமூக நாடுகள் அந்நாட்டுடன் பொருளாதாரத் தடையை மேற்கொள்ளத் தயங்காதென்று எச்சரிக்கை விடுத்துள்ளது. (உ)

## அனலைதீவு உபதபாற்கந்தோர் தரமுயர்ந்தது

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு உப-தபாற்கந்தோர் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட தபாற்கந்தோர் அத்தியட்சகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்தத் தபாற்கந்தோரை 18ந் திகதி சம்பிரதாயமாக ஆரம்பித்துவைப்பார்.

## தேர்தல் ஊழியருக்கு விசேட ரயில்

கொழும்பு, வெள்ளி

தேர்தல் கடமையாற்றும் ஊழியர்கள் கடமையின் பொருட்டு வெளியூர் செல்வதற்கு விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அந்தந்த ரயில்நிலையங்களில் தேர்தல் அதிகாரிகள் அவர்களை வரவேற்பர். (உ)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 21ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

29ந் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் அதற்கு அடுத்த நாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

தேர்த் திருவிழாவன்று அன்னதானமும் வழங்கப்படும் (இ)

# ஐந்து ஆண்டுகளுக்குள் ஊழலற்ற நிர்வாகம்: சட்டசபையில் எம். ஜி. ஆர்.

சென்னை, ஜூலை 15

''தமிழ்நாட்டில் இன்னமும் ஐந்து ஆண்டுகளுக்குள் ஊழலற்ற ஒரு நிர்வாகத்தை அமைக்க எமது அரசு முயற்சி மேற்கொள்ளும்'' என்றுதமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உறுதியளித்தார்.

ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது சட்ட மேலவையில் நேற்று தொடர்ந்து நடைபெற்றவிவாதத்தின்போது திரு. எம். ஜி. ஆர். உரை நிகழ்த்தினார்.

### குறைபாடுகள் தொடராது

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

''கடந்தகால ஆட்சியில் இருந்ததுபோல் சில ஒழுங்கீனங்களும் குறைபாடுகளும் மீண்டும் ஏற்படாதவாறு எமது அரசு கவனித்துக்கொள்ளும். நிர்வாகத்தில் குறுக்கீடுகள் தவிர்க்கப்படும்

ஊழல் மிக்க நிர்வாகத்தை மக்கள் இனியும் பொறுக்கமாட்டார்கள் என்பதை நடைபெற்று முடிந்த சட்டசபைத் தேர்தலில் எமது கட்சிக்கு அளித்த பெரு வெற்றி மூலம் மக்கள் எடுத்துக்காட்டிவிட்டார்கள்.

### அண்ணாவழியில் நல்வாழ்வு சமுதாயம்

சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி பேரறிஞர் அண்ணாவின் வழியில் நல்வாழ்வு சமுதாயம் ஒன்றை அமைக்க எமது அரசு பாடுபடும். வறுமையும், வேலையில்லாப் பிரச்னையும் நீங்கி கிராமப்புறங்களில் வளம் பெருக அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### குடிநீர்ப் பிரச்னை

கோடிக்கணக்கான பணம் செலவுசெய்யப்பட்டும் இன்னும் சில கிராமங்களில் குடிநீர்ப் பிரச்னை தீர்ந்தபாடாக இல்லை. இதுவிடயத்திலும் அரசு கவனம்செலுத்தும்.

### கல்வியின் முக்கியத்துவம்

கல்வியைப் பொறுத்தவரையில் அது மாநில விஷயம் 'ஸ்ளார்க் உத்தியோகம்' பெறுவதற்காக மட்டும் கல்வி கற்கவேண்டும் என்ற மனோபாவம் மாணவரிடையே இருந்துவிலகவேண்டும். வாழ்க்கையின் அன்றாட சவால்களைச் சமாளிப்பதற்கு கல்வி பயன்படும்என்பதனை மாணவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ்நாட்டில் இருமொழித் திட்டமே தொடர்ந்தும் அமுல் நடத்தப்படும். தமிழ் ஆட்சி மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்கும்.

### கிராமப்புறங்களில் தொழில்கள்

மாநிலத்தில் உள்ள பொதுவான நிபுணர்களின் ஆற்றல், பொருளாதார வளங்கள் என்பனவற்றைக்கொண்டு கிராமப்புறங்களில் பல தொழில்களை ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும்.''

முதல்வரின் உரையை அடுத்து ஆளுநர் உரை மீதான பிரேரணை ஏகமனதாக சபையில் நிறைவேறியது. (உ)

## சஞ்சீவரெட்டிக்கு தி. மு. க.வும் ஆதரவு

சென்னை, ஜூலை 15

பாரத ஜனாதிபதி தெரிவில் ஜனதா கட்சி வேட்பாளர் திரு. எம். சஞ்சீவரெட்டியை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும் என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் நேற்று இது பற்றி கலைஞர் நிருபர்கள் மத்தியில் பேசுகையில், 'திரு. சஞ்சீவரெட்டியை ஜனாதிபதியாகத் தெரிவு செல்வதற்கு கட்சிகள் அனைத்தும் ஏகமனதாக ஒப்புக்கொண்டுள்ளதால் தி மு கவும் இதற்கு ஆதரவாயிருக்கவேண்டும் என்று ஜனதா கட்சி எம்மிடம் கேட்டுக்கொண்டது. எனவே தி. மு. கவும் இத்தெரிவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது'' என்றார்.

தி. மு. கவுக்கு ராஜ்ய சபாவில் இரு உறுப்பினர்களும் லோக்சபாவில் ஒரு உறுப்பினரும் தமிழ்நாடு சட்டசபையில் நாற்பத்தெட்டு உறுப்பினர்களும் உள்ளனர். (உ)

# நியூற்றன் குண்டு! ''கார்ட்டரின் கொள்கைக்கு முரண்பாடானது''

லண்டன், ஜூலை 15

'நியூற்றன்' பயங்கர குண்டுகளைத் தயாரிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் அங்கீகாரம் அளித்துள்ளது மத்திய ஐரோப்பாவில் படைக்குறைப்பு நிகழவேண்டும் என்ற அவரது கொள்கைக்கு முரண்பாடாக உள்ளது என்று 'வார்சோ' உடன்படிக்கை நாடுகள் தெரிவித்திருக்கின்றன.

### ஜெனீவாவில் வல்லரசுகள் கூட்டம்

இதேவேளை அணு ஆயுத பரிசோதனைகளை முற்றாகத் தடைசெய்வது தொடர்பாக ஜெனீவாவில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தமது ஆலோசனையின் இரண்டாவது கூட்டத்தை நேற்று தொடர்ந்து நடத்தின.

கூட்ட விபரங்கள் அந்தரங்கமாக வைக்கப்பட்டுள்ளன என்று அங்கிருந்து வெளியான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

## ஜனநாயகத் தேர்தல்

லண்டன், ஜூலை 15

கானாவின் இராணுவ அரசு பொதுத் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடத்த முடிவு செய்துள்ளது. (உ)

## ஓரிரவில் நடந்த நியூயோர்க் கொள்ளைகள்: 2000 வழக்குகள் பதிவு?

நியுயோர்க், ஜூலை 15

நியுயோர்க் நகரில்நேற்றுமுன் தினமிரவு திடீரென ஏற்பட்ட மின்சாரத் தடையைப் பயன்படுத்தி நடைபெற்ற கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக 2000 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

பலத்த இடிமுழக்கமே மின்சாரம் தடைப்பட்டதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்னமும் நகரின் சிலபாகங்களின் மின்சாரம் தடைப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. (உ)

## வடகொரியாவுடன் அமெரிக்கா மோதாது

வாஷிங்டன், ஜூலை 15

அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஒன்றை வடகொரியா சுட்டுவீழ்த்தியது சம்பந்தமாக வடகொரியாவுடன் அமெரிக்கா மோத விரும்பவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின்போது ஹெலிகொப்டரில் இருந்த மூவர்கொல்லப்பட்டனர். ஒருவர் வடகொரியாவால் உயிருடன் சிறைபிடிக்கப்பட்டார்.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் உள்ள யுத்த சூன்யப்பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கட்டிட நிர்மாணப்பொருட்களை ஏற்றிச்சென்ற இந்த ஹெலிகோப்டர் வழிதவறிச் சென்றிருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர்

இதேவேளை இச்சம்பவத்தையடுத்து தென்கொரியாவில் உள்ள அமெரிக்கத் துருப்புகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று செய்தி ஸ்தாபன அறிக்கைகள் கூறுகின்றன. (உ)

## ''கொள்கைப் பிடிப்புள்ளோரே தலைவர்கள்'' — முதலியார்

யாழ்ப்பாணம், சனி

''தமிழ் மக்களின் சுபீட்சத்திற்காக உறுதியான இலட்சியத்தைக் கடைப்பிடிக்கும் அரசியல் தலைவர்களே நமக்குத் தேவை. இந்தவகையில் பார்க்கும்இடத்து. காலத்துக்குக் காலம் கொள்கைகளை மாற்றி மக்களை ஏமாற்ற முனைவோரே மலிந்திருக்கின்றனர்.''

இவ்வாறு மானிப்பாய்த் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக ஜி ஜி. காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு. சி பொ. வ. மா. க. முதலியார் கூறினார்.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் திரு. க. ஜெயராஜசிங்கம் தலைமையில் தம்மை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''மக்களை எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது. மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்றார்.

**மணிவாக்கு**

சொர்த நாடு உனக்குத் தங்கத் தொட்டில்.
—சோவியத் பழமொழி

ஈழநாடு
THE EELANAADU

# தமிழ் ஈழம்

தேர்தலுக்கு இன்னும் சிலதினங்களே இருக்கின்றன. தேர்தல் பிரச்சாரம் உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது.

தென்னிலங்கையில் ஆட்சி பீடத்துக்காகப் போட்டியிடும் பிரதானகட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சி, இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் தங்களுக்கே வெற்றியென்றும் தாங்களே ஆட்சிபீடம் ஏறப்போவதாகவும் கூறுகின்றன.

ஜூலை 21-ந் திகதிக்குப் பின்னரும் தாமே பிரதம மந்திரியாக இருப்பாரென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகா கூறுகிருர். ஜூலை 22-ந் தேதி புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி ஜனதிபதி தம்மையே அழைப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நம்பிக்கையுடன் கூறுகிருர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சமசமாஜ, கம்யூனிஸக் கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்றன.

அம்பாறை, சேருவல ஆகிய இரு தொகுதிகளையும் தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது.

தமிழ் ஈழம் அமைப்பதே தமது கொள்கையென்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறது.

பிரசாரக்கூட்டங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தமிழ் ஈழ இலட்சியத்தை விளக்கிக் கூறி வருவதுடன் இந்தப்பொதுத் தேர்தலை தமிழ் ஈழக்கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாகவே கருதுகிற தென்பதையும் எடுத்துக் கூறிவருகின்றனர்.

தமிழர் சுயாட்சிக் கழகம் வடக்கில் நான்கு தொகுதிகளில் வேட்பாளரை நிறுத்தியிருக்கிறது.

கழகத்தின் கொள்கை தமிழ் ஈழம் அமைப்பதே.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் சுயேச்சைகள் பெரும்பாலும் புதிய கட்சிகளில் கேட்கின்றனர். இவர்களும் தமது கொள்கை தமிழ் ஈழம், பிரதேச சுயாட்சி என்றே கூறி வருகின்றனர்,

மொத்தத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் கட்சிகளும் சுயேச்சைகளும் ஒரே இலட்சியத்துக்காகவே தேர்தலில் நிற்கின்றன?

ஆனாலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஒருவரையொருவர் சாடுகின்றனர். தேர்தல் பிரசாரத்தில் இதை எதிர்பார்க்கவேண்டியதுதான். தேர்தல் சமயத்தில் இவர்களின் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது.

ஆனால் தேர்தல் முடிந்த பின்பு இவர்களனைவரும் வேறுபட்டு நிற்கவேண்டிய அவசியமேயில்லை.

வெற்றி பெறுபவர்களும் தோல்வியடைபவர்களும் பெறும் வாக்குகள் அனைத்துமே தமிழ் ஈழக் கோரிக்கைக்கேயாகும்.

எனவே தேர்தல் முடிந்த பின் வெற்றியீட்டியவர்களும் தோல்விகண்டவர்களும் தங்களுக்குக் கிடைத்த வாக்குகள் தங்கள் கோரிக்கைக்குக் கிடைத்த வாக்குகள் என்று ஒரே குரலில் எடுத்துக் கூறுவது தமிழ்பேசும் மக்களின் ஐக்கியத்தை எடுத்துக் காட்டுவதாக அமையுமென்பது நிச்சயம்.

# "தமிழீழ அமைப்பிலேயே பொருளாதாரம் வளரும்"

## சுயாட்சி மயில்வாகனன் கருத்து



நாவற்குழி, வெள்ளி

"தமிழ் ஈழம் அனமப்பதே எமது கழகத்தின் கொள்கை அந்தக் கொள்கை அடிப்படையிலேயே நான் இன்று சாவகச்சேரித் தொகுதியில் போட்டியிடுகிறேன். தனிநாடு கோரிக்கையை முதலில் எழுப்பியவர் எமது தலைவர் திரு. வி. நவரத்தினம் தான்" என்று சுயாட்சிக்கழக சார்பில்சாவகச்சேரியில் போட்டியிடும் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனன் தம்மை ஆதரித்து நாவற்குழியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. செல்லத்துரை கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. மயில்வாகனன் மேலும் கூறியதாவது:

"நான் சுதந்திரக்கட்சியைச் சார்ந்தவன் என்று சிலர் விஷமப்பிரசாரம் செய்கின்றனர். சுதந்திரக்கட்சி தமிழ்ஈழம் கோருமாறு எதையும் சொல்லி எனது ஆதரவாளர்களை ஏமாற்றிவிடமுடியாது. நான் தேர்தலிலிருந்து விலகிவிடப் போவதாகவும் பொய்ப்பிரசாரத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறர்கள். இப்படி கதைகட்டி எனது ஆதரவாளர்களைத் திசைதிருப்ப முனைபவர்களுக்கு எனது ஆதரவாளர்கள் எதிர்வரும் 21ம்திகதி நல்லபாடம் புகட்டுவார்கள்.

"மூன்றே ஆண்டுகளில் தமிழ் ஈழம் பெற்றுவிடலாம் என்று பிரசாரம் செய்து வந்த சிலர் பொருளாதாரப்பலம் பெற்றபின்னர்தான் தமிழ் ஈழம் சாத்தியம் என்று இப்போது கூறிவருகிறர்கள். தமிழர் பூமி பொருளாதாரம் வளம் நிறைந்தது எமது பொருளாதாரம் பலவளிகளிலும் நசுக்கப்பட்டு வருகிறது யாழ்ப்பாணத்துச் சிமெந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அரசு வெளிநாட்டுச் செலாவணியை பெருமளவில சம்பாதிக்கிறது. இந்தப்பொருளாதார வளத்தைக் காப்பாற்றவும் வளர்த்துக் கொள்ளவும் முதலில் தமிழ்ஈழம் அமைய வேண்டும். சுதந்திர தன்னுதிக்கமுள்ள தமிழ்ஈழம் அமைத்த பின்பே பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கலாம்". (அ)

# "தமிழ்ஈழ அமைப்பை தடைசெய்யாதீர்"

யாழ்ப்பாணம், சனி

தமிழ்மக்கள் அளிக்கின்ற வாக்குகள் தமிழ்ஈழ சோஷலிச சமுதாயத்தை உருவாக்குகின்ற வாக்குகள். தனிப்பட்டவர்களது விருப்பு, வெறுப்புக்களுக்கு வாக்களிப்பதன்மூலம் இறைமையும், தன்னுதிக்கமுமுள்ள தமிழ்ஈழ அமைப்பிற்கு தடைசெய்யாதீர்.

இவ்வாறு நல்லூர்த்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் திரு. மு. சிவசிதம்பரம் கூறினர்.

மூன்னுள் யாழ். மாநகர உதவிமேயர் திரு ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நல்லூர் செட்டித்தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

1972ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய அரசியலமைப்பு தமிழரின் உரிமைகளைப் பறித்ததனுல் அதுவரை பிரிந்திருந்தநாம் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கினேம். பின்னர் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற முதலாவது தேசிய மகாநாட்டில் முப்பெரும் தலைவர்களைக்கொண்ட நமதுஇயக்கம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. அன்று முதல் தமிழ்ஈழப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றேம். தேர்தலுக்காகமட்டும் ஆரம்பிக்கப்பட்டதல்ல எமது இயக்கம். எனவே வருகின்ற தேர்தலின்முடிவு தமிழினத்தின் விடிவாக அமையட்டும்.

திரு ஆ. துரைராஜசிங்கம் தமதுரையில் கூறியதாவது:

'இந்த அரசாங்கத்தின் சட்டத்தை மீறியவனும், பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டவனுமாகிய மறுசிரா என்ற கேடி தூக்கப்பட்டபோது அவன் தூக்கப்பட்டு இறந்தானு? இறந்தபின் தூக்கிவிடப்பட்டானு என்று விசாரணை நடத்தியது. ஆனல் யாழ் நகரில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது தமிழின் பெருமைகேட்கவந்த அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தபோதும், புத்தளத்தில் முஸ்லிம் சகோதரர்களைச் சுட்டுக்கொன்றபோதும், நல் லூருக்குச் சென்று திரும்பிய பராசா நாயைப்போல் சுடப்பட்டபோதும் இந்த அரசாங்கம் பாராமுகமாக இருந்ததை நாம் மறந்துவிடவில்லை. தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிரிழந்த ஒன்பது பேருக்குச்சிலை எழுப்பியபோது அதை தகர்த்தெறிந்து அந்த அளவிற்கு இந்நாட்டில் தமிழன் சிலையாக நிற்கக்கூடிய உரிமையற்றவன் என்று எடுத்துக்காட்டியது இந்த அரசாங்கமே. ஏதோ அற்ப சொற்ப சலுகைகளைக் காட்டி தமிழினத்தை விலைபேசிவிடலாம் என கனவுகாண்கிறது அரசு. ஆனல் தமிழர்கள் இனியும் ஏமாறத் தயாராகவில்லை. அவர்கள் தங்கள் இன்னல்களுக்கும், துயரங்களுக்கும் முடிவுகாண ஒரேவழி தனிநாடுதான் என்பதை நன்ருக உணர்ந்துகொண்டுவிட்டார்கள். இனி எந்தவிதமுயற்சியும் அவர்களது நடவடிக்கைகளைத் தடைசெய்யமுடியாது.

'சட்டத்தரணி திரு. விஸ்வநாதன் தமதுரையில், '1972ம் ஆண்டு ஆக்கப்பட்ட அரசியல் சாஸனம் அடிமைச் சாஸனமாக ஆக்கப்பட்டபோது

(5-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழ் ஈழத்தில் ஏற்றத்தாழ்வு இராது'

— நல்லூர் சிவா

அரியாலை, வெள்ளி

"கடந்த தேர்தல்களில் தனித்தனி நின்று தேர்தலில் வெற்றிபெறுவதையே நோக்கமாகக்கொண்டு உழைத்த காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி ஆகிய இரண்டும் இன்று தமிழ் மக்களுக்குத் தமிழ் ஈழம் அமைப்பதையே குறிக்கோளாகக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பலம் பொருந்திய அமைப்பை ஏற்படுத்தியுள்ளன."

இவ்வாறு தமிமர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் நல்லூர்த் தொகுதியில் கலைமகள்வட்டாரத்தில் காந்தி நிலைய வெள்ளி விழா அரங்கில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. யேசுதாசன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் "நாம் அமைக்கவிருக்கும் தமிழ் ஈழத்தில் சாதி மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தையே உருவாக்க முனைந்துள்ளோம், இதற்கு எடுத்துக் காட்டாகவே உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராசலிங்கத்தை கூடடணி வேட்பாளராக நியமித்துள்ளோம். சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைகளை முன்வைத்து இதுவரை கட்சி வளர்த்த இடதுசாரிக் கட்சிகள் இதுவரை செயல் முறையில் செய்ய நினைக்காத காரியத்தை நாம் செயலில் காட்டியுள்ளோம். உடுப்பிட்டி மக்கள் காட்டிவரும் உற்சாகத்தின் மூலம் உடுப்பிட்டியில் இராசலிங்கத்தின் வெற்றி உறுதியாகிவிட்டது. ஆண்ட இனம் ஆளப்போகிறது. இதனுல் சிறுபான்மைத் தமிழ்மக்கள் ஒதுக்கப்படப்போகிருர்கள் என்று பயங்காட்டிவருகிருர்கள். இதனை யாரும் நம்பவேண்டாம். நாம் அமைக்கவிருக்கும் தமிழ் ஈழத்தில் சாதி மத பேதமே இருக்காது" என்றுர்.

திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் "எம் மத்தியில் ஆயிரக்கணக்கான பிரச்னைகள்

# "தேர்தலின் பின்பும் போராட்டம் தொடரும்"

## காங்கேசனில் 'தர்மர்'

மாவிட்டபுரம், வெள்ளி

"பல்வேறு இயக்கங்களாகப் பிரிந்து நின்று நாமே நம்முள் மூட்டிமோதி வந்த நிலைமாறி இன்று ஒரே இலட்சியத்திற்காக ஒரே கொடியின் கீழ் ஒரேதலைமையில் ஒன்றுபட்டிருக்கும்போது தமிழ் மக்கள் தொடர்ந்தும் பிளவுபட்டு நிற்கக்கூடாது. தம்மிடையேயுள்ள வேற்றுமைகளைக் களைந்து நாம் தமிழர் என்ற அடிப்படையில் தமிழர்விடுதலைக் கூட்டணியை ஆதரித்தால்தான் நமக்கு வருங்காலத்தில் விமோசனம் கிடைக்க முடியும்"

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு அ. அமிர்தலிங்கம் கிளாலையில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:

இத் தேர்தலில் நமது வேட்பாளர்களா? அல்லது எதிர் அணி வேட்பாளர்களா? வெற்றிபெறுவார்கள் என்பதல்ல பிரச்னை. தமிழ்மக்களது தன்மானத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் எதிரான இப்போட்டியில் தன்மானமா? அடிமைத்தனமா? வெற்றிபெறப் போகிறது என்பதுதான் கேள்வி. ஆகவே தமிழ்மக்கள் நன்கு சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்றுர்.

### தர்மலிங்கம் பேச்சு

மானிப்பாய் தொகுதி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து வாழ தமிழ்ஈழம்தான் ஒரே வழி எனக் கூறும் நாம் அதற்காக எம்மிடையேயிருந்து வந்த வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டுள்ளோம். இந்த ஒற்றுமை தேர்தலுக்காக ஏற்பட்ட ஒன்று அல்ல. தேர்தல்தான் எமது குறிக்கோள் அல்ல. தொடர்ந்து நாம் மேற்கொள்ள இருக்கும் போராட்டங்களிலும் இந்த ஒற்றுமை நிலவும். அதன் மூலம் தமிழ்ஈழம் விரைவில் மலரும்" என்றுர்.

திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் பேசுகையில் "காங்கேசன் துறையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட நான் விண்ணப்பித்தேன். ஆனல் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. ஆனாலும் நான் கட்சி மாறவோ அரசியலிலிருந்து ஒதுங்கவோ இல்லை. தமிழ் ஈழம் பெறுவதுதான் எனது இலட்சியம். அதற்காக பாராளுமன்றம் செல்வதால் மட்டுமல்ல வேறுபல வழிகளிலும் தொண்டாற்றமுடியும். நான் அதற்காகப் பாடுபடுவேன்" என்ஞர். (இ)

உண்டு. நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமும் எமக்கென்று சுதந்திரத் தமிழ் ஈழம் அமைப்பதின் மூலமுமே இவைகளை நிவர்த்தி செய்துகொள்ளமுடி

[7-ம் பக்கம் பார்க்க]

# "தமிழ்ஈழத்தில் மக்கள் தம்மை தாமே ஆள முடியும்"

## புத்தளத்தில் கதிரவேலுப்பிள்ளை விளக்கம்

புத்தளம், வெள்ளி

''தமிழ்த் தேசிய இனம் தனக்குரிய தமிழ்த் தாயகமாக அமைக்கப்போகின்ற தமிழ் ஈழம் மதசார்பற்ற அரசாகவே அமையும். சாதியின் பேரால் - மதத்தின் பேரால் எந்தப்பகுதி மக்களும் தாழ்த்தப்படுவதற்கு எந்தக் கட்டத்திலும் தமிழ் ஈழ அரசு அனுமதிக்காது. தாழ்த்தப்பட்ட சமூக அமைப்பு சட்டரீதியாக துடைத்தெறியப்படும். ஒரு மாகாண மக்கள், மறுமாகாண மக்களை அடக்கி ஆளுகின்ற நிலை எந்தக் கட்டத்திலும் தமிழ் ஈழத்தில் ஏற்படாது.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிக் பொருளாளரும் கோப்பாய் கூட்டணி வேட்பாளருமான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை புத்தளத்தில் கூறினார். ஜனாப் அப்துல்லா தலைமையில் புத்தளம் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''அந்தந்தப் பிரதேச மக்கள் தங்களைத் தாங்களே ஆளக் கூடிய முறையில் சுயாட்சி அமைப்பு தமிழ் ஈழத்தில் உருவாக்கப்படும். முஸ்லிம் மக்கள் சுயநிர்ணய உரிமையோடு கூடிய சுயாட்சி அனுபவிக்க அனுமதியளிக் கப்படுவார்கள். தமிழ் ஈழத்துக்கு வெளியே இருக்கின்ற தமிழ் பேசும் மக்களின் மொழி, மத, அரசியல் உரிமைகளுக்கு சிங்கள அரசிடம் உத்தரவாதம் பெறப்படும் அதே வேளையில், தமிழ் ஈழத்தில் வாழும் சிங்கள மக்களுக்கும் அந்த உரிமை அளிக்கப்படும். எனவே தமிழ் ஈழத்தில் எவருக்காவது அல்லது எவருடைய மதத்துக்காவது இடையூறு ஏற்படும் என்று எவரும் சிந்திக்கவேண்டிய அவசியமில்லை.''

ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர், சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''சிறுபான்மை மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபடுவதன்மூலமே தமது உரிமைகளை அவர்களால் நிலைநாட்ட முடியும். ஆளும் வர்க்கத்தினர் எம்மைப் பிரித்தாண்டு அழிக்க முனைந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே சிறுபான்மை இனங்கள் விழிப்போடு இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். புத்தளத்திலும், யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் தமிழ் பேசும் மக்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டதன்மூலம், பெரும்பான்மை மக்களின் ஆட்சியிலே சிறுபான்மை இனங்களின் உயிர்களுக்குக்கூடப் பாதுகாப்பில்லை என்பதை நாம் புரிந்து கொண்டோம். தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் இருக்கின்ற தொழிற்சாலைகளில்கூட தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. சிங்களவர்களுக்குஇத்தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புக் கொடுக்கப்படுவதன் மூலமும் சிங்களக் குடியேற்றம் துரிதப்படுத்தப்படுகிறது. எனவே எம்மை நாமே ஆள ஒன்றுபட்டுப் போராடவேண்டும்.''

புத்தளம் வேட்பாளர் டாக்டர் ஐ. எம். இல்யாஸ், புரட்சி மாறன், ஆ. இரகுபதிபால ஸ்ரீகரன், செல்வி தி கணபதிப்பிள்ளை, மு. சண்முகநாதன் உட்படப் பலர் பேசினர்.

## உடுப்பிட்டியில் இன்று விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது

— இராசலிங்கம்

யாழ்ப்பாணம், சனி

'நான் சிங்களவர்களிடம் செல்கையில் என் காரிலுள்ள உதயசூரியன் கொடியை அகற்றிவிட்டுச் செல்வதாக கூறுகிறார்கள். எனக்கு என்றுமே பின் கதவால் போய்ப் பழக்கமில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அபேட்சகன் நான். எனவே எந்த தொகுதிக்கு போனாலும் என் காரில் கொடியேற்றிய படியே இருக்கும்'.

யாழ். கிறீன்பில்ட் விளையாட்டுக் கழகத்திற்கு அருகாமையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

சமாதான நீதிபதி ஞானப்பிரகாசம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது:

நான் ஒரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் மனிதாபிமானத்துடன் மக்களின் தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் என்றும் உதவி செய்வேன்.

திரு. பரராஜாவை பொலிசார் சுட்டபொழுது மூன்று நாட்களாக அவரது நலன்களைக் கவனித்தேன். இது ஒரு இளைஞன் அநியாயமாக சுடப்பட்டான் என்ற காரணத்தால் நான் செய்த தனிப்பட்ட உதவி.

தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்தவர்கள் பற்றி ஆராய தனிநபர் கமிஷனை யாழ் மக்கள் சார்பாக நியமித்து அதன் காரியதரிசியாக பணியாற்றியவன் நான். நீதி சாகக் கூடாதென்பதற்காக தனிப்பட்ட முறையில் நான் செய்த உதவிஇது. இப்படியான தனிப்பட்ட உதவிகளை என் இறுதி மூச்சு உள்ளவரை நான் என்றும் செய்வேன். ஏனெனில் மக்களுடைய உணர்ச்சிகளை மனிதாபிமானத்துடன் புரிந்து கொள்ளாதவர்கள் மரங்களாகத்தான் இருத்தல் வேண்டும்.''

உடுப்பிட்டி த. வி. கூ. வேட்பாளர் திரு. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி பரிசோதனை ஒன்றைத் துணிவுடன் நடாத்துகிறது. சாதிபேசும் தமிழ் மக்களிடையே அழிந்தொழிந்து கொண்டு போகின்றது. என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டும் பரிசோதனை உடுப்பிட்டியில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பெரும்பான்மை இனத்தவர் அதிக அளவில் வாழும் தொகுதி ஒன்றில் தான் இப் பரிசோதனை நடாத்தப்பட வேண்டும். அப்போது தான் அது உண்மையான பரிசோதனையாக அமையும். இன்று உடுப்பிட்டித் தொகுதியில் காணப்படும் புதிய உத்வேகத்தையும் புத்துணர்வையும் பார்க்கையில் இப்பரிசோதனையில் தமிழர் விடுதலைக் கூட்டணி பல்லாயிரக் கணக்கான வாக்குகளால் பெருவெற்றியீட்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

முதலில் நான் போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றே சகல தொகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் விரும்பினர். ஆனால்இன்று போட்டியேற்பட்டது. புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கையில் ஒருவகையில் போட்டி ஏற்பட்டதும் நன்மைக்கே என்று எண்ணத்தோன்றுகிறது. அவ்வளவு தூரம் புதிய சமுதாய விழிப்புணர்ச்சியை உடுப்பிட்டித் தொகுதியில் காணக்கூடியதாக இருக்கின்றது.

சிறுபான்மை தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தமிழ் ஈழ அரசியல் யாப்பு மூலம் நிரந்தர தீர்வு காணப்படும். (கி-இ)

## அரசியல்மேடையில்ஆசிரியர்: ஐ. தே. க. வேட்பாளர் கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

''ஆசிரியர்களை மேடையில் ஏற்றி அவர்களால் வாழும் சமுதாயத்தை சீரழிய வைக்கிறார்கள் சில அரசியல்வாதிகள்'' என்று ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஐ தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ம. அமிர்தலிங்கம் வேலணை மேற்கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கண்டனம் தெரிவித்தார்.


திரு. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், ''ஜனநாயகமுறையில் நடைபெறும் தேர்தலில் ஜனநாயக ரீதியாக செயல்பட ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு. அடக்குமுறை, பலாத்காரம், வன்முறைச் செயல்கள், ஆகியனவற்றைக் கையாளுதல் மூலமாகவோ அன்றில் பழிவாங்குவோம் என மிரட்டுவது மூலமோ வாக்குப்பெற எந்த ஒரு வேட்பாளரோ நினைப்பின் அவர் ஜனநாயகத்தின் முதலாவது எதிரியாவார்'' என்றார். (உ)

## தமிழ்ஈழம்—

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அன்று ஆட்சியிலிருந்த இடதுசாரிகள் பிரச்னையை தீர்த்திருக்கலாம். அரசிலிருந்த டாக்டர் என். எம். பெரேரா ஏன் திருத்தப் பிரேரணையைக் கொண்டுவரவில்லை ஆனால் இன்று தமிழ்மக்களின் பிரச்னை தீர்க்கப்படவேண்டிய ஒன்று என்று கூறுகிறார்.

திரு. குணராஜா தமது உரையில், எம்மிடையே இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமை ஆரம்பத்திலேயே ஏற்பட்டிருந்தால், இந்த நிலையை நாம் அடைந்திருக்கமாட்டோம். எமது இன விடுதலைக்காக நாம் ஆரம்பத்தில் மேற்கொண்ட போராட்டங்களெல்லாம் எம்மிடையே இருந்த வேற்றுமைகளாலும், வேறுபாடுகளாலும் நாம் எதிர்பார்த்தளவு வெற்றியை அளிக்கவில்லை. எனினும் இன்றுநாம் எமது வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டுவிட்டோம். நிச்சயம் நாம் இழந்த தமிழ் ஈழத்தை மீட்டே தீருவோம்' என்றார். (இ-கா)




வேலர்: மயிலர், உன்னோடு படித்த நண்பன் தேர்தலில் போட்டியிடுகிறார். உன்னுடைய வோட் அவருக்குத்தானே!

மயிலர்: அவருக்காகத்தான் பிரச்சாரம் செய்யிறன். ஆனால் என்வோட் அவருக்குப் போடன்.

வேலர்: ஏன்?

மயிலர்; என்னுடைய வீடுவந்து என்னுடைய வோட்டைக் கேட்கவில்லை அவர்.

— சுந்தர்

## பிரதமர், ஜே. ஆருக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, வெள்ளி

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினதும் இல்லங்களுக்கு அருகே விசேட ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையினர் காவலுக்கு அமர்த்தப்பட உள்ளனர்.

தேர்தல் நடைபெறும்தினமான இம்மாதம் 21ம் திகதி முதல் சிலநாட்களுக்கு இப் பாதுகாப்பு நடவடிக்கை அமுலில் இருக்கும் என்று பொலிஸ் பகுதி தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகளினால் ஏற்படும் விளைவுகளை அடுத்து இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை முறியடிக்கும் நோக்குடனேயே இப்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

## "காணியற்றவர்களுக்கு காணி வழங்குவது நம் கொள்கை"

பிங்கிரியா, வெள்ளி

''1970-ம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், காணி சுவிகரிப்பு பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஆனால் பயங்கரவாத இயக்கம் தலை தூக்கியபின் தான் காணிசீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது'', உறப்பொத்தவில் நடந்த தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசிய, ஐ. தே. கட்சி அபேட்சகர் திரு. ஜே. எல். சிறிசேன . மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிறிசேன மேலும் கூறியதாவது: ''காணிச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு காரணம் பயங்கரவாத இயக்கத்தை நடத்திய வாலிபர்கள். இந்தப் பெருமை அவர்களையே சாரும். ஐ. தே. கட்சி ஆட்சிக்குவந்த ஒவ்வொருதருணமும். மக்களுக்கு, ஆயிரக்கணக்கான நிலத்தைப் பகிர்ந்தளித்து வந்துள்ளது. காணியற்றவர்களுக்குக் காணி வழங்குவதுதான் ஐ. தே. கட்சியின் காணிக்கொள்கையாகும். காணிகளை மக்களிடமிருந்து பறிப்பது எம்கொள்கையல்ல. (க)

## "கிருமிநாசினிகள் ப. நோ. கூ. சங்கம் மூலமே விற்பனை செய்யவேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

'விவசாயிகளை ஊக்குவித்து நல்ல விளைச்சலைப் பெருக்குவதற்கும் நாம் பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல்வதற்கும் நல்ல கிருமிநாசினிகளை ஆராய்ச்சி செய்து விநியோகிக்கவேண்டும் ஆனால் தற்போது விவசாயிகள் கிருமிநாசினிகளின் தட்டுப்பாட்டால் பயிர்களை நல்லமுறையில் விருத்திசெய்வதில்லை'

யாழ் லயன்ஸ்கிளப் விவசாயக்கருத்தரங்கு, யாழ். விவசாயப்பாடசாலையில் நடைபெற்றபோது மகாஇலுப்பள்ளமஆராய்ச்சி நிபுணர் திரு. வோல்டர் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசுகையில் விவசாயிகளின் நன்மைக்காகவும் நாட்டுமக்களின் நன்மைக்காகவுமே நாம் புதுவிதமான ஆராய்ச்சிகளைச் செய்துவருகின்றோம் என்றும் நாம் புதுவிதமான கிருமிநாசினிகளைக் கண்டுபிடிப்பதனால் மீண்டும் வெங்காயம், மிளகாய்போன்ற பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கலாம் என்றும் கூறினார்.

டாக்டர் சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது;-

'விவசாயிகளின கஷ்டங்களை நீக்குவதற்கு இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் உதவி செய்கின்றன. யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு பயிர்கள்மீது தாக்கும் பூச்சிவகைகளை அழிப்பதற்கு வழிவகைகளை ஆராய்வதற்கு இதுபோன்ற கருத்தரங்குகள் நல்லவழிவகுக்கும்.

திரு. எம். வாமதேவன் பேசுகையல் கூறியதாவது:- உண்மையான விவசாயி யார்? போலிவிவசாயிகள் யார் என்பது கண்டுபிடிப்பது கஷ்டம் என்று இங்கு கூறப்பட்டது. இதைப்பொறுத்தமட்டில் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கமும் விவசாய உற்பத்தி நிலையங்க

(7-ம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

# தேர்தல் போட்டி 77

**யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான சபைக்கு நிதி சேர்த்து உதவும் மூகமாக 'ஈழநாடு' இப்போட்டியை நடத்துகின்றது.**

போட்டி நிபந்தனைகள்

1. 'ஈழநாடு' ஸ்தாபன இயக்குநர்கள், ஊழியர்கள் அவர்களின் குடும்பத்தினர் ஆகியவர்களைத் தவிர்ந்த ஏனைய அனைவரும் வயது வரம்பின்றி இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

2. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும் பிரவேசப்பத்திரங்களே போட்டியில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

3. போட்டிக்கான பிரவேசக் கட்டணம் ரூ. 1/- ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் பிரவேசக்கட்டணம் ஒருரூபாய் வீதம் அனுப்பப்படல் வேண்டும். தபாற் கட்டளை அல்லது காசுக் கட்டளைகள்:-

வட இலங்கை புற்றுநோய்ச் சங்கம்,
யாழ்ப்பாணம்

என்ற பெயரில் எடுக்கப்பட்டு, பிரவேசப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும், எக்காரணம் கொண்டும் பிரவேசக்கட்டணம் ரொக்கமாக அனுப்பப்படலாகாது.

4. நிரப்பப்பட்ட பிரவேசப் பத்திரங்கள்;

பொது முகாமையாளர்,
'ஈழநாடு'
த. பெ. 49
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு, கடித உறையின் இடது மேற்கரையில் 'ஈழநாடு' தேர்தல் போட்டி 77' எனக் குறித்து 20-7-1977ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையில் இடதுபக்கம் கீழ்க்கரையில் அனுப்புபவரின் முகவரி தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பதாக ஒரு வேட்பாளர் காலமானுல் அவர்போட்டியிடும் தொகுதி இப் போட்டியிலிருந்து நீக்கப்பட்டுவிடும்.

6. இப் போட்டியில் ஐந்து கேள்விகள் அடங்கும். அவைகளுக்குப் பின்வரும் புள்ளிகள் வழங்கப்படும்.

கேள்வி 1... 25 பெயர்கள் 2 புள்ளிகள் வீதம் 50 புள்ளிகள்
" 2...... ...... 06 "
" 3...... ...... 06 "
" 4...... ...... 08 "
" 5... 15 பெயர்கள் 2 புள்ளிகள் வீதம் 30 புள்ளிகள்
மொத்தம் 100 "

7. புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றிகள் நிர்ணயிக்கப்படும். முழுவதும் சரியான விடைகளுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். பிழையான விடைகள் அதற்குரிய புள்ளிகளை இழந்துவிடும்.

8. வெற்றி பெறுவோருக்கு பின்வரும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்:-

| | | |
|---|---|---|
| 1ம் | பரிசு | ரூ 1000 |
| 2ம் | " | ரூ 500 |
| 3ம் | " | ரூ. 250 |

மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் போட்டியாளருக்கு முதல் பரிசு வழங்கப்படும் இரண்டாவது மூன்றுவதாக அதிக புள்ளிகளைப் பெறும் போட்டியாளர்களுக்கு அந்த ஒழுங்கின்படி பரிசுகள் வழங்கப்படும். மிகக் கூடுதலான புள்ளிகள் பெறும் போட்டியாளர்கள் ஒருவருக்கு மேற்படின்- இருவராயின் திருவுளச்சீட்டின்படி முதல் இரண்டு பரிசுகளும் தீர்மானிக்கப்படும்; இருவருக்கு மேற்படின் முதல் மூன்று பரிசுகளும் திருவுளச்சீட்டின்படி தீர்மானிக்கப்படும். இரண்டாம், மூன்றும் பரிசுகள் விஷயத்திலும் இதே முறை கையாளப் படும்.

9. போட்டி முடிவுகள் 21-8-1977 'ஈழநாடு' வாரமலரில் வெளியிடப்படும். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் ஏற்பாடுகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

10. இப்போட்டியில் "ஈழநாடு தேர்தல் போட்டி 77 நடுவர்குழு" வின் தீர்ப்பே இறுதியானதாகவும் சட்டப்படி கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். இப்போட்டி முடிவுகள் தொடர்பாக போட்டியாளர்களுடனே வேறு எவருடனுமோ எந்தக்காரணத்தின் நிமித்தமும் 'ஈழநாடு' எதுவித கடிதத் தொடர்புகளும் வைத்துக்கொள்ள மாட்டாது.

11. தெளிவின்றியும், கிறுக்கியும், வெட்டியும் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

# "இந்தியாவுடன் இலங்கை இணைக்கப்படவேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

இந்தியாவுடன் இலங்கை இணைக்கப்படவேண்டும் என்று இலங்கை இந்திய இயக்கத்தின் சார்பில் போட்டியிடும் டாக்டர் ஆ. தர்மலிங்கம் இங்கு நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையை தலைநகராய்க் கொண்ட மாவன்னிப் பிரதேசம், மகாநுவரப் பிரதேசம் ஆகிய இரண்டு அரசுகளாக இலங்கையைப் பிரித்து அவை தனித்தனி சுதந்திரமாக இயங்காமல், தமிழ்நாடு, அஸ்ஸாம், மகாராஷ்டிராபோன்று பூரண சமத்துவம் உடையனவாய் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்பதே எனது கொள்கையாகும்.

இலங்கை ஜனநாயக இந்தியாவின் ஒருபகுதியாக இருக்க விரும்பாவிடின் இந்தியாவின் சட்டபூர்வமான உரித்தாளி என்ற அளவில் சம உடமை இந்தியா இலங்கையைத் தனதாக்கிக் கொள்ளும். சோவியத் ஒன்றியம் பலவாகப் பிரிந்திருப்பின் அது இன்று பலமான ஒரு நாடாக முடியாது.

"100 மைல்களுக்கு அப்பால் உள்ள போர்மோசாவை சீனு உரிமைகோர முடியுமாயின்; 300 மைல்களுக்கு அப்பாலுள்ள போல்க்லாந்து தீவுகளின் சனத்தொகையை ஆர்ஜன்ரைனு சட்டபூர்வமாக சேர்க்கமுடியுமாயின், 100 மைல்களுக்கு அப்பாலுள்ள சைபிரஸ் கிரேக்கர் சைபிரசை கிரேக்கத்துடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை கிரேக்கம் ஆதரிக்க முடியுமாயின், துருக்கி 40 மைல்களுக்கு அப்பாலுள்ள சைபிரசை துண்டாடக் கோருமாயின், 7100 தீவுகள் பிலிப்பைன்சாக இயங்க முடியுமாயின். கிறீன்லாந்தும் பாரோத் தீவுகளும் டென்மார்க்கின் ஒரு பகுதியாக முடியுமாயின், இந்தியா அந்தமான், நிக்கோபார், லட்சத் தீவுகளை ஆளமுடியுமாயின், இலங்கை 20 மைல்களுக்கப்பாலுள்ள இந்தியாவுடன் ஏன் இணைய முடியாது.

1919ல் இரவீந்திரநாததாகூர் இங்கிலாந்தில் திரு. வி. சுந்தரலிங்கத்துடன் தங்கியிருந்தபோது திரு. சுந்தரலிங்கம் தாகூரிடம் இந்திய தேசிய கீதத்தில் இலங்கையை சேர்க்குமாறு ஆலோசனை கூறினர். இவ்வாலோசனையைக் கேட்டு தாகூர் பெருமகிழ்ச்சி அடைந்தார். இலங்கையும் அக்கீதத்தில் சேர்த்தார். ஆனல் மூன்று நாட்களின் பின்னர் லண்டன் வாழ் இந்தியர்கள் இலங்கையையும் சேர்ப்பது அப்பொழுது நிலவிய சூழ்நிலையில் விரும்பத்தக்கது அல்ல எனக் கருதியதினல் இலங்கையின் பெயர் நீக்குப்பட்டதாக தாகூர் கூறினர்.

1935ல் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா இந்திய பொல்சவிக் லெனினிஸ்ட்கட்சியைத் தாபித்தபோது அவரது இலக்கு இந்தியாவையும் இலங்கையையும் ஒரே அரசின்கீழ் இணைப்பதாகவே இருந்தது.

1941ல் திரு ஆ. தியாகராசா சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்த தமது ஆய்வுக் கட்டுரையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொது நாணயம் இருப்பதனை வியந்துரைத்துள்ளார். இலங்கை வங்கி விளக்கக்குழுவின் ஆலோசனைப்படி சுதந்திர இலங்கை தனியான ரூபாய் நாணயத்தை வைத்திருப்பது நல்ல கொள்கையாய் இருந்தாலும்கூட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொதுவான நாணய இணைப்பு இருப்பது விரும்பத்தக்கது.

ஆரம்பகாலத்தில் தென் இந்திய நாணயமே இங்கும் புழங்கியது. தென்இந்தியாவின் தங்கப் பகோடாவும் 1818க்குப் பின் வெள்ளி நாணயமும் தரநாணயங்கள் ஆயின 1835ல் ஒரே மாதிரியான ரூபா நாணயம் இந்தியா முழுவதும் ஏற்பட்டபோது இலங்கையும் அத்துடன் சேர்ந்து கொண்டது என்று அவர் அப்போது கூறினர்.

திரு அநகாரிக தர்மபாலா 21-10-1915ல் சேர். பொன்னம்பலம் இராமநாதனுக்கு எழுதிய கடிதத்தில் இந்திய அரசின்கீழ் சிங்களச் சமூகம் இருந்தால் மட்டுமே அவர்கள் துயர்துடைக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். சிங்கள. தமிழ் இனங்களுக்கு இந்தியாவே தாயகம். இந்து-பௌத்தம் ஆகிய இரு மதங்களுமே இந்தியாவில் பிறந்தவை. இலங்கையரது நாகரீகம், இந்தியரது நாகரீகமே. சிங்களவர் வடஇந்தியாவைத் தாயகமாக நோக்கவேண்டும்" எனக்குறிப்பிட்டுள்ளார். (இ-)

# 'ஒற்றுமைக்காகவே மீண்டும் கூட்டணியில் இணைந்தனர்'

**வி. தர்மலிங்கம்**

கொடிகாமம், வெள்ளி

"கொள்கை வேறுபாடு காரணமாகத் தமிழ்க்காங்கிரஸில் இருந்து தந்தை செல்வா பிரிந்து தமிழரசுக்கட்சியை அரம்பித்துச் சாத்வீக முறையில் தமிழ் மக்களின் நன்மைக்காகப் போராடினர். சிங்கள அரசாங்கங்கள் போராட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே மீண்டும் கொள்கை ரீதியில் ஒற்றுமையோடு இரு தலைவர்களும் கூட்டணியில் இணைந்திருந்தார்கள்."

இவ்வாறு மட்டுவில் வடக்கில் இளைப்பாறிய தலைமையாசிரியர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மானிப்பாய்க் கூட்டணி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் கூறினர்.

சாவகச்சேரித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. என். நவரத்தினத்தை ஆதரித்து நடந்த கூட்டத்தில் திரு. வி. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது: "தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழக் கொள்கையில் முக்கியத்துவத்தைப் புரிந்த இளைஞர்கள், கூட்டணியின் வேட்பாளர்களுக்கு ஏகோபித்த ஆதரவு கொடுத்துத் தங்களைச் சிறைக்குச் செல்ல அனுமதிக்கும்படி கோரியுள்ளனர்."

திரு செ. சிவராசா பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை, உலகம் அறிந்ததென்றும், ஆனல் தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸார் தங்கள் கொள்கையைக் கூறுகிறுர்கள் இல்லையென்றும் கூறினர்.

# "'தமிழ் ஈழம்' ஏற்றத்தாழ்வற்ற. நாடாகவே இருக்கும்"

**பண்டத்தரிப்பில் 'அமிர்'**

பண்டத்தரிப்பு, வெள்ளி

"சுயநல நோக்குடைய சிலர் இன்று சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் வந்து பிரிவினைக் கோரிக்கை அவர்களுக்கு மிகவும் பாதகமானது என்று தவருகப் பிரசாரம் செய்து வருகின்றனர். தனிச் சிங்களச் சட்டத்திலும் தரப்படுத்தல் திட்டத்திலும் சிறுபான்மைத் தமிழர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிங்களவர் தமிழர் என்ற பிரச்னை எழும்போது எவரும் பெரும்பான்மைத் தமிழர் சிறுபான்மைத் தமிழர் என்றெல்லாம் பாகுபாடு காட்டப்படுவதில்லை. தமிழ்மொழியைத் தமது தாய்மொழியாக கொண்ட முஸ்லீம் மக்கள் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து தனிநாட்டிற்காக போராட முன்வந்துள்ளார்கள். இதே போல எமது சிறுபான்மை தமிழ் இன மக்களும் கூட்டணிக்கு ஆதரவளித்து தங்கள் பங்கினைச் செலுத்த வேண்டும்"

மேற்கண்டவாறு உடுப்பிட்டி தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு.த இராசலிங்கம் சில்லாலை கிராமத்திலுள்ள சாந்தையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டைத்தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. திருநாவுக்கரசுவை ஆதரிக்கு முகமாக திரு.க நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரான திரு.அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

தமிழர்மத்தியில் சாதிப்பாகுபாட்டையும், தீண்டாமையையும் ஒழித்து சமத்துவமுள்ளதொரு சமதர்மசமுதாயமாக மிளிரச் செய்யவே தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்புகின்றது. கடந்த காலங்களில் சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளுக்காக நாங்கள் சார்ந்திருந்த தமிழரசுக் கட்சி பல்வேறு முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. கூட்டணியின் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தீண்டாமையை ஒழிக்க வேண்டும். என்ற முக்கிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எதிர்காலத்தில் தனியாக பிரிந்து தமிழ் ஈழம் நிறுவப்பட்டால் தமது நிலைமைபற்றி சிறுபான்மைத் தமிழ் சகோதரர்கள் எவரும்அஞ்சத்தேவையில்லை. நாம் நிறுவவிருக்கும் தனித் தமிழ் ஈழம் சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத் தாழ்வற்றதொரு அமைப்பாகவே இருக்கும் என்பதை உறுதியுடன் கூறிவைக்க விரும்புகிறேன்."

திரு.மாட்டின் செல்லையா பேசுகையில் "இன்றைய நிலையில் சகல தமிழ் பேசும் மக்களும் தங்கள் வேற்றுமைகளை மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர். "சிறுபான்மைத் தமிழர்கள்" என்ற சொல்லையே இனி நாங்கள் பாவிக்கக் கூடாது. இதை வைத்துச்சிலர் அரசியல் பிழைப்பு நடாத்த முயற்சிக்கின்றனர். இதற்கு இடம் கொடுக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்.

நடிகமணி திரு.க.வைரமுத்து இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு சிவதாஸன் ஆகியோரும் உரையாற்றினர்கள். (இ)

# ரூ. 1000 அபராதம்

யாழ்ப்பாணம், சனி

சவர்க்காரம் அதிகவிலைக்கு விற்ற ஒரு வர்த்தகர் விலைக் கட்டுப்பாட்ட திகாரியால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு 1,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்ட சம்பவம் விஸ்வமடுவில் இடம் பெற்றுள்ளது.

விஸ்வமடுவில் ஒருவர்த்தக நிலையத்தில் வர்த்தகர் ஒருவர் 83 சதம் விற்கவேண்டிய லைபோய் சோப் ஒன்றை 1ரூ.20 சதமாக விற்றபோது விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர் திரு. நா. சண்முகத்திடம் அகப்பட்டுக் கொண்டார். அவ்வர்த்தகரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதவான் ரூ1000 அபராதம் விதித்தார். (கா-இ

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

73-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) போன்: 7180
70-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

REGAL (JAFFNA)
Daily: at 4-45, 7-00 & 9-30 p.m. only
ROBERT LOUIS STEVENSON'S CLASSIC
TREASURE IsLAND
(Color)

மனோகரா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன்-சௌகார்ஜானகி
ஆலயம்
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர்—லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

RIO (Jaffna)
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
Now Showing
Sex Comedy
CHASTITY BELT
(கற்புக் கவசம்)
(Adults Only)

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, ஜெமினி, சாவித்திரி
கப்பலோட்டிய தமிழன்
(புதிய பிரதி)

## கிருமிநாசினி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் காலத்திற்குக் காலம் விவசாயிகளின் உபஉணவுச்செய்கைக்கு கடன்கள் வழங்கி வருவதனால் இந்த இரண்டு நிறுவனங்களினாலுமே உண்மையான விவசாயிகளை இனங்கண்டுகொள்ள முடியும். எனவே இந் நிறுவனங்களே கிருமிநாசினிகளை விநியோகிப்பதற்கு தகுதியுடையனவாயிருக்குமே தவிர தனிப்பட்ட வர்த்தக நிறுவனங்களல்ல.

அம்புஸ், சுமுதிலின் கிருமிநாசினிகளை நீரில்கலந்துதெளிக்கும் போது விவசாயிகள்மரணமாவதாக பத்திரிகை வாயிலாக அறிகிறோம். நீரில் கலந்த பின்பும் சக்திகூடிய இக் கிருமிநாசினிகளை 4 அவுன்ஸ்போத்தலில் திறந்து 2 அவுன்ஸ்சுகளாகப் பிரித்துக்கொடுக்கிறார்கள். இதன் அர்த்தம் என்ன? இது கலப்படமாகத் தெரிகின்றது. எனவே கிருமிநாசினிகளின் விநியோகத்தை ப. நோ. கூ, சங்க விற்பனை நிறுவனங்கள்மூலம் வழங்கஒழுங்கு செய்யவேண்டும். (கு)

## தமிழ்—

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யும். பிறப்பினால் ஏற்றத் தாழ்வு காண்பிக்கப்படுவதைத் தடுக்க முதன்முதல் சட்டம் கொண்டுவர முயற்சிசெய்தவர்கள் தமிழரசுக்கட்சியினர் தான்.

"நாம் அமைக்கும் தமிழ் ஈழத்தில் சாதிபேதம் வேரோடு களையப்படும். சாதி பேதம் பாராட்டுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். வட இலங்கையில் இயங்கும் மாஸ்கோ சார்புள்ள கம்யூனிஸ்ட் கட்சி "இலங்கையிலே வாழும் தமிழ் இனம் தனித் தேசிய இனம் என்றும், அதுபிரிந்து செல்ல வேண்டியேற்படின் பிரிந்து செல்லவும் உரிமையிருக்கவும் வேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றித் தலைமைப் பீடத்துக்கு அனுப்பி வைத்ததுடன், வட பிரதேசத்தில் கூட்டணி வேட்பாளர்களுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்தாது விட்டதுடன் கூட்டணி வேட்பாளரின் வெற்றிக்காகவும் உழைத்து வருகிறது. பிற்போக்குச் சக்திகள் எமக்கு எதிராகவே இயங்குகின்றன. அவற்றை எதிர்த்து நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஒற்றுமையின் அடிப்படையில் விடுதலை பெற்று பூரண சாதி-மத பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உள்ளடக்கிய தமிழ் ஈழம் ஒன்றை அமைக்க நாம் எல்லோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் ஒன்று படுவோம்" என்று கூறினார்.

கூட்டத்தில் திருவாளர்கள் குணராசா, வண்ணை ஆனந்தன், செல்வன் மௌரிச , திரு. கரிகாலன், திரு. நா இராமலிங்கம் ஜே. பி. ஆகியோர் பேசினர். (உ)

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-3…
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-மஞ்சுளா
அன்பே ஆருயிரே

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவகுமார் - ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன் லதா
வீட்டுக்கு வந்த மருமகள்

# ' சர்வாதிகாரியாகவர ஜேஆர் விரும்புகிறார்'' — பிரதமர்

அக்குரச, வெள்ளி

'இலங்கைப்பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்ய ஜனாதிபதி மாளிகைக்கு இம்மாதம் 21-ம் தேதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா செல்லமாட்டார். நான் தான் போய் சத்தியப்பிரமாணம் செய்வேன்'

அக்குரசவில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில், பேசிய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:

"எங்குசென்றாலும்நாட்டின் எப்பாகம் சென்றாலும் டின் எப்பாகம் சென்றாலும், மக்கள் ஆயிரக்கணக்கில் தம்மை வரவேற்கிறார்கள். மக்களுக்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவில்நம்பிக்கையில்லை. நான் அண்மையில், வெலிசர என்ற இடத்திற்குச் சென்றபோது ஜே. ஆரிமிடருந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என மக்கள் கேட்டார்கள்.

'ஒரு சர்வாதிகாரியாக வர வேண்டும் என்பதுதான் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நோக்கமாகும். ஐ. தே. கட்சி மற்றும் சில அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து மக்களைப் பயமுறுத்தி வாக்குவேட்டையாடி வருகிறார்கள். ஆனால் மக்களின் தீர்ப்பு, ஐ. தே. கட்சிக்கு எதிராக இருக்கும் என்பது தான் என் நம்பிக்கை. மக்கள் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே ஒரு கட்சி சுதந்திரக்கட்சி தான். ஆதலால் சுதந்திரக் கட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரமக்கள் ஆதரவளிக்கவேண்டும்.''

# "7 மாதமாக நாட்டின் நிர்வாகம் இயங்கவில்லை"

## டாக்டர் என். எம். கூறுகிறார்

கொழும்பு, வெள்ளி

"கடந்த 7 மாத காலமாக நாட்டில் நிர்வாகம் இயங்கவில்லை. இப்படியான நிலையில் மனிதன் எப்படி வாழமுடியும்?"

பெலியாத்தையில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது, சமசமாஜக்கட்சி தலைவர் என். எம். பெரேரா மேற்கண்டவாறு கேள்விஎழுப்பினார்.

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் கூறியதாவது:

"டாக்டர்கள் சட்டப்படி வேலைசெய்துவருகிறார்கள். சரியான முறையில் கல்வி அளிக்கப்படவில்லை. பல்கலைக்கழக வளாகங்களிலும் இந்தநிலை தான். நாடு முழுவதும் வேலை நிறுத்தநடவடிக்கைகள்.

"பிரதமர் முதலாளிமார்களுக்கு உதவி அளித்து அவர்களை மேலும் செல்வந்தர்களாக்கிவிட்டார். இதனால் ஏழைமக்கள் மேலும் துன்பமடைந்துள்ளார்கள்.

"நாட்டின் பிரச்னைகளை ஐ. தே. கட்சியோ, சுதந்திரக் கட்சியோ தீர்த்துவைக்கப் போவதில்லை. இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் தான் நாட்டின்பிரச்னைகளைத் தீர்த்து வைப்பார்கள்.

"சமசமாஜக்கட்சியை அரசிலிருந்து வெளியேற்றிய சுதந்திரக்கட்சினர் இன்று இடதுசாரி ஐக்கியமுன்னணியினருடன் இணைய முயற்சிக்கின்றனர். (ஃ)

# "ஒதுங்குவேன் என்பதில் உண்மையில்லை"

## — …ஏபிரகாம்

யாழ்ப்பாணம், சனி

"செசாருக்கு உரியதை செசாருக்கும், ஆண்டவனுக்கு உரியதை ஆண்டவனுக்கும் செலுத்துங்கள்" என்று வேதாகமம் கூறுகின்றது. ஆகவே வணக்கத்துக்குரிய சமயகுரவர்கள் அரசியல் கட்சி மேடைகளில் ஏறக்கூடாது. மக்களுக்குரிய நல்வழியைப்போதிப்பதனை அவர்கள் தேவாலயத்தில் வைத்துக் கொள்ளலாம்."



இவ்வாறு நேற்று முன்தினம் பாஷையூர் கடலன்னை மைதானத்தில் யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாமுக்கு ஆதரவாக நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. எம். சிங்கராஜர் பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னைநாள் பாஷையூர் வட்டார மாநகரசபை உறுப்பினர் திரு. போல்ராஜ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பிக்கு முன்பதாக வேட்பாளர் டாக்டர் ஏபிரகாம் பொய்க்கால் குதிரை நடனத்துடன் அரங்கிற்கு அழைத்துவரப்பட்டார். அவர் பேசும்போது 25 நிமிடங்களுக்கு வெடிகள் முழங்கின. 400க்கும் மேற்பட்ட மாலைகளை ஒருகாசுமாலை உட்பட ஆதரவாளர்கள் அணிவித்தனர்.

டாக்டர் ஏபிரகாம் பேசுகையில் கூறியதாவது:

"என்னை ஆரவாரத்தோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்பது எனக்கு மகிழ்வை ஊட்டுகின்றது. உங்கள் ஆதரவு எனது வெற்றியின் அடிப்படையாகும் நான் ஒரு சுயேச்சையா? அல்லது கட்சி ஆதரவாளனா என்று நானே ஐயப்படுமளவுக்கு நீங்கள் என்னை திக்குமுக்காடும் ஆதரவளித்துள்ளீர்கள். நான் மாநகரசபை உறுப்பினனாகப் பதவி வகித்த 3ம் வட்டாரத்தில் இன்னும் இனியும் எந்த வித கூட்டமும் வைக்கப்போவதில்லை. அங்கேதான் எனது வெற்றிக்கூட்டத்தை வைக்கத் தீர்மானித்துள்ளேன். வெற்றி எனது பக்கம் என்றிருக்கையில் நான் 20-ம திகதி தேர்தலிலிருந்து ஒதுங்கப்போவதாக சிலர் செய்யும் பிரசாரம் எந்த விதத்திலும் உண்மையற்றது."

ஈச்சமோட்டை திரு. எஸ். பாலசிங்கம் திருவாளர்கள் கே. சாந்தலிங்கம், இ. பாக்கியநாதன், எஸ். தங்கராசா, அ. மரியதாஸ், ஜஹூப் பசீர் உட்படப் பலர் உரையாற்றினர். (கூ-அ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாடு
The EELANADU

# எண்ணெய் அகழ்வு வேலை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

எண்ணெய் ஆகழ்வு வேலைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன என்று பெற்ரோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசுவாமி அறிவித்துள்ளார்.

இரு எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் வேலைகள் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டில் ஏற்கனவே ஆரம்பமான மன்னார் பகுதியிலான அகழ்வு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (உ)

## "எதிர்ப் பிரசாரங்களினல் ஆத்திரமடையாதீர்
### காவலூர் நவம் வேண்டுகோள்

வண்ணார்பண்ணை, வெள்ளி

இலட்சிய ரீதியாககொள்கை ரீதியாக மேடைகளில் பேச முடியாதவர்கள் தரமற்ற முறையில் மேடைகளில் தேர்தல் பிரசாரம் செய்வதும் செய்யாத சேவைகளையெல்லாம் செய்தோம்என்று பிரசாரம்செய்வதிலும்காடைத்தனம் செய்வதிலும் ஈடுபட்டுவருகின்றனர். இப்படியான நடத்தைகளைக் கண்டு எமது ஆதரவாளர்கள் ஆத்திரப்படாது சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும்''.

இவ்வாறு வேலணை பள்ளம் புலத்தில் நடந்த தமிழர் சுயாட்சிக்கழக தேர்தல்பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய தமிழர்சுயாட்சிக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளருமான திரு. வ. நவரத்தினம் தெரிவித்தார்.

பண்டிதர் க. இராசையா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

அரசியல்ரீதியாகவும், தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவது சம்பந்தமாகவும் தமிழர்சுயாட்சிக் கழகம் இதுவரை பகிரங்கமாக விடுத்த கோரிக்கைகளுக்கோ, கேள்விகளுக்கோ, சவால்களுக்கோ தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பதில் எதுவும் கொடுக்கவில்லை. இதற்குப் பதிலாக உண்மைக்கு மாறான பிரசாரங்களைச்செய்து மக்களை மேலும் ஏமாற்ற முயல்கின்றனர். இதிலிருந்தே இக் கூட்டணியினரின் தகுதியையும் தரத்தையும் மக்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது.

கழக பொதுச்செயலாளர் சட்டத்தரணி திரு. செ. கோடீசுவரன் துணைச்செயலாளர் திரு. ந. ஸ்ரீகாந்தா சட்டத்தரணி, திரு. கே. பி. எஸ் வரதராசா சட்டத்தரணி உட்படப்பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

## 'தமிழ்மக்களின் தலைமையை காவலூர் நவமே ஏற்பார்'

யாழ்ப்பாணம், சனி

தந்தை செல்வநாயகத்துக்குப்பிறகு தமிழ் மக்களை வழிநடத்தக்கூடிய தகுதி தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் நவரத்தினத்திற்கே உண்டு. பத்து வருடங்களுக்கு முன்னரே தீர்க்க தரிசனத்துடன் தனிநாட்டுக்கோரிக்கையை முன்வைத்த நவரத்தினம் தீவுத் தொகுதியில் வெற்றியீட்டிஞல் தமிழர்களின் தலைமையினை அவர் பெறுவது நிச்சயம்.

இவ்வாறு கரம்பனில் நடைபெற்ற தமிழர் சுயாட்சிக் கழகப்பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஞா. மே. செபஸ்தியாம்பிள்ளை குறிப்பிட்டார்.

போலியான ஒற்றுமைக் கோஷத்தை மக்கள் நிராகரித்து தனிநாட்டுக்காகப் போராடக் கூடிய நேர்மையான தலைவர்களையே எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. தா. மகேஸ்வரன், க. சண்முகலிங்கம் ந. ஸ்ரீகாந்தா உட்பட பலர் உரையாற்றினர்கள். (இ)

## குமாருக்கு அன்புத்தொல்லை

யாழ்ப்பாணம், சனி

நாவாந்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் யாழ். தொகுதி வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலத்திற்கு பலநூற்றுக் கணக்கில் ஆதரவாளர்கள் மாலைகள் அணிவித்தனர்.

மாலையணிவிப்பதில் மக்களிடையே காணப்பட்ட பேரார்வமும் எழுச்சியும் திரு. குமார் பொன்னம்பலத்துக்கு அன்புத் தொல்லையாகிவிட்டது.

மாலையணிவிக்க வாய்ப்புக் கிடைக்காதவர்கள் மலர்தூவி மகிழ்ந்தனர். (கூ-உ)

'உண்மையே வெல்லும்''
பருத்தித்துறைத்தொகுதி வேட்பாளர்
திரு. மு.பொ. வீரவாகு
அவர்களை ஆதரித்து
இன்று (16-7-77 சனிமாலை 5 மணி)
மாபெரும் பொதுக்கூட்டம்
இடம்:- "தந்தை செல்வா அரங்கு''
(பருத்தித்துறைக் கடற்கரை மைதானம்)
எமது உண்மை நிலைகேட்க அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்
6664

## குமார், சந்திரகாசன் வழக்குப் பேச்சில் ஆலால்!

யாழ்ப்பாணம், சனி

திரு. குமார் பொன்னம்பலம் திரு. சந்திரகசானின் வழக்குப்பற்றி பிரசாரக்கூட்டமொன்றில் கூறியதற்கு திரு சந்திரகாசன் மற்றொரு கூட்டத்தில் பதிலளித்தார். இதற்கு மற்றொரு கூட்டத்தில் திரு. குமார் மறுத்தான் கொடுத்தார். இதற்கு மு. ஆலாலசுந்தரம் குருநகரில் நேற்று முன்தினமிரவு நடந்த கூட்டத்தில் பதில் கொடுத்தார்.

திரு. யோகேஸ்வரனை ஆதரித்து நடத்த இக்கூட்டத்தில் திரு. மு. ஆலாலசுந்தரம் கூறியதாவது:-

'தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன், மாவட்ட நீதிமன்றத்தினல் குற்றவாளியாகக் காணப்பட்ட காரணத்தினலேதான் தேர்தலில் போட்டியிட முன்வரவில்லையென்று குமார் பொன்னம்பலம் கூறியிருப்பது முற்றும் முழுதும் உண்மைக்குப் புறம்பானதே. குமார் பொன்னம்பலம் கண்ணியத் தொழிலான ஒரு சட்டத்தரணி. ஒரு வழக்கு முடியு முன்பு அதைப் பற்றிப் பேசுவதோ பொது இடங்களில் குறிப்பிடுவதோ அவருடைய தொழிலின் ஒழுங்குமுறை தெரியாததைத்தான் காட்டுகிறது. குமார் பொன்னம்பலம் குறிப்பிட்ட வழக்கு தனது கட்சிக்காரரின் நலனைக் காப்பதற்காக சந்திரகாசன் நீதிமன்றத்தோடு காரசாரமான விவாதத்தை மேற்கொண்டதால் அதிருப்தியடைந்த நீதிமன்றம் சந்திரகாசன் நடந்துகொண்ட தனத தீர்ப்பில் குறிப்பிட்டாரேயன்றி சந்திரகாசனைக் குற்றவாளியாகக் காணவில்லை. அந்த வழக்கில் சந்திரகாசன் ஒரு கட்சிக்காரரின் சட்டத்தரணியாக ஏற்பட்டாரேயன்றி ஒரு எதிரியாகவோ வழக்காளியாகவோ நிற்கவில்லை. ஒரு வழக்கில் கட்சிக்காரராக இல்லாத ஒருவர் எப்படிக் குற்றவாளியாகக் காணப்பட முடியும் என்ற உண்மை தெரியாத ஒரு சட்டத்தரணியாக குமார் இருப்பது விந்தையானது.

அந்த வழக்கில் இடைக்காலத் தடையுத்தரவுத் தீர்ப்பில்தான் சந்திரகாசன் தனது கட்சிக்காரருக்காக நீதியின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கை பற்றிக் குறிப்பிடப்பட்டது. மேற்படி குறிப்பு முறையற்றதெனக் கண்டு அதனைபதிவேட்டிலிருந்துநீக்குவதற்கான நிலைமேன்முறையீட்டு வழக்கின் இறுதித்தீர்ப்பில் இடம்பெற வேண்டியதாகும். ஆகவேமேன்முறையீட்டில் இருக்கின்றஒரு வழக்கைப் பற்றி ஒரு சட்டத்தரணியே குறிப்பிட்டுப் பேசியது கண்ணியத் தொழிலின் கோட்பாடுகளுக்குப் புறம்பானதாகும். எல்லாத் தகுதியுமுள்ள சந்திரகாசன் குமாரைப்போல் தேர்தலில் போட்டியிட முன்வராதமை தனது சுயநலப்போக்கைச் சுட்டிக்காட்டுகிறதேயென்ற குற்ற மனப்பான்மையால் இத்தனை பெரிய பொய்யைக் கூறி மக்களைத் திசை திருப்ப முற்படுகிறார்.

குறிப்பிட்ட வழக்குக் குறிப்பேட்டின் புகைப்படப்பிரதியொன்றைத் தான் வைத்திருப்பதாக குமார் கூறுவது சிறுபிள்ளைத்தனமான கூற்றாகும். ஒரு வழக்கின் பதிவேடு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியாகவே பெறுவதற்கு வாய்ப்பிருக்கும்போது புகைப்படப் பிரதியெடுத்து வைத்திருப்பதாகக் கூறுவது அர்த்தமற்ற பேச்சாகும்.

## இன்றைய உற்சவம்

வண்ணை சிவன் கோவிலில் 6-ம் திருவிழாவான இன்று பகல்திருவிழா பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 6 முதல் 7-30 வரை செல்வி வசந்த கௌரி சண்முகராசாவின் "அப்பரும் திருத்தொண்டும்'' என்ற பொருள் பற்றிய பிரசங்கம் இடம்பெறும். இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூசையும், அம்பாள் புஷ்பப் பல்லக்கில் விதிவலம் வருதலும் நிகழும். (அ)

## கிரிக்கட் போட்டி

அரியாலை, சனி

கல்வி அமைச்சின் ஆதரவின் கீழ் கல்லூரிகளுக்கிடையே மாகாண ரீதியில் நடாத்தப்பட்ட 16வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கட் போட்டியில் வடமாகாணத்தில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 71.55 புள்ளிகளைப் பெற்று சிறந்த கோஷ்டியாக விளங்கும் யாழ்-பரி.யோவான் கல்லூரிக் கோஷ்டிக்கும், மொரட்டுவைப் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீசுமங்கலா மகா வித்தியாலயக் கோஷ்டிக்குமிடையில் இன்று யாழ்.பரி யோவான் கல்லூரி மைதானத்தில் கிரிக்கட்போட்டி நடைபெறவிருக்கிறது.

## நாளை அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

மூதறிஞர் செல்வா, சட்டமேதை ஜீ.ஜீ., மாமேதை திருச்செல்வம் ஆகிய முப்பெரும் தமிழ்த் தலைவர்களுக்கும் அஞ்சலிக் கூட்டம் அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ்கிளை ஆதரவில் நாளை காலை அரசடி விநாயகர் ஆலய யாழ் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறும். அ.எ.வி.சங்க யாழ் கிளைத் தலைவர் திரு. இ. மு ருஷ்ணபிள்ளை தலைமை வகிப்பார்.

## கொடுமைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கலைஞர் கருணாநிதி கூறியதும்; முதல்வர் எம்.ஜி. ஆர், "தமிழ் மொழிக்கு இங்கு ஆபத்து நேர்ந்தால் அல்லது இந்திமொழி திணிக்கப்பட்டால், தி. மு க.வும், அ.இ.அ. தி.மு கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி போன்று செயல்படும் என்று கூறியதும் பல அங்கத்தவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

"ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம நிறைவேற்றப்படுமா'' என்று கலைஞர் கேட்டதும், முதல்வர் எம். ஜி. ஆர், "தமிழ் நாட்டில் விளையும் முழுஅரிசியையும் அரசு கொள்முதல் செய்தால் தான் இத்திட்டம் பலனளிக்குமென்றும் 3, 4 மாவட்டங்களில் இத்திட்டத்தைச்செயற்படுத்துவதென்றல் கூட ஆண்டுக்கு 72 கோடி ரூபா அரசுக்கு தேவைப்படும்'' என்றும் கூறினர்.

### நீதிவிசாரணை

"நெருக்கடி காலத்தில் தி. மு. கழக அங்கத்தவர்கள் மிகவும் கொடுமைக்குள்ளானர்கள். இது குறித்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?''என்று கலைஞர் கேட்டதும் முதல்வர் எம் ஜி.ஆர். "நிச்சயமாக நடக்கும்''என்று கூறிவிட்டு "நெருக்கடி காலத்தில் தி. மு. கழகத்தினர்பாதிக்கப்பட்டது பற்றி மட்டுமல்ல, அதற்குமுன்னர் தி. மு. கழகத்தின் மூன்றரைவருட ஆட்சிக் காலத்தில்- அதன் கரங்களில், அ. இ. அ. தி. மு. கழகத்தினரும் ஆதரவாளர்களும்எவ்விதமாகக் கொடுமைப்படுத்தப்பட்டார்கள்-எவ்விதமாக அநீதி நடந்தது- என்பது பற்றியும் விசாரணைகள் நடைபெறும். இதற்காக விரைவில் நீதிவிசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும்'' என்று பதிலளித்ததும் பேரவையில் சில செகண்டுகள் அமைதி நிலவிற்று.

தமிழக முதல்வர் தமது உரையின் முடிவில்,தமிழ்நாட்டில் மதுவிலக்குச் சட்டம் பூரணமாகச் செயல்பட தீவிர கவனம் செலுத்தப்படும் என்றும் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனை வழங்க விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறினர்.

தமிழக சட்டப் பேரவை மீண்டும் ..ம் திகதி கூடும்.

## சாக்கினுள் பெண்ணைக் கட்டிவைத்துக் கொள்ளை!

நோட்டன்பிரிட்ஜ், வெள்ளி

கணவர் வீட்டில் இல்லாசமயம் மனைவியை சாக்கொன்றில் கட்டிப்போட்டுவிட்டு கொள்ளைக் கோஷ்டியொன்று துப்பாக்கி, தோட்டாக்கள் உட்பட 52,000 ரூபா பெறுமதிமிக்க பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது

இத் திகில் சம்பவம் நோட்டன் பிரிட்ஜில் நடைபெற்றுள்ளது.

இரவு 11-00 மணியளவில் கொள்ளையர்கள் தர்மரத்ன என்பவரது மேற்படி வீட்டுக்குள் நுழைந்து உடைகள், கடிகாரங்கள், துப்பாக்கி, தோட்டாக்கள் உட்பட குறிப்பிட்ட தொகை பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு வீட்டைவிட்டு புறப்படுகையில் தர்மரத்ன வீட்டிற்குத் திரும்பிவந்தாராம்.

கொள்ளையரில் மூவரைஅவர் அடையாளம் கண்டுகொண்டாராம். அவர்கள் இதே யிடத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சாக்கில் கட்டப்பட்டிருந்த மனைவியை தர்மரத்தின அவிழ்த்து காப்பாற்றினர்.

பொலிஸ்விசாரணை துரிதமாக நடைபெறுகிறது. (உ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 16ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.